# அருள்மிகு சிவன் கோவில்
# சைவத் தமிழ்ச் சங்கம்
## 25வது ஆண்டு கலைவாணிவிழா 2018

www.sivankovil.ch www.anpesivam.com www.sivantv.com

## 01.01.2008 – 31.12.2008

- தேவார மனனப்போட்டி.

பண் : புறநீர்மை

**நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி**
**வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்**
**கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்**
**குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.**

பொழிப்புரை:

சிவபெருமானின் வலத் திருவடியில் வீரக்கழலும், இடத் திருவடியில் சிலம்பும் ஒலிக்கின்றன. அவர் பாம்பணிந்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர். திருநீறு அணிந்த திருமேனியர். மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவர். இடபக்கொடி உடையவர். சந்தனக் கட்டைகளும், கரிய அகில் கட்டைகளும், மாணிக்கக் கற்களும் அளவின்றிக் கரையில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் திருக்கோண மாமலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்றார்.

பண் : கொல்லி

**மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்**
**பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்**
**ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்**
**ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.**

பொழிப்புரை:

மான்போன்ற மருண்ட பார்வையுடைய மாதரசியே! பாண்டிய மன்னனின் மனைவியான பெருந்தேவியே! கேள். யான் பால்வடியும் நல்ல வாயையுடைய பாலன் யான் என்று நீ இரக்கமடைய வேண்டா. திருஆலவாயரன் துணைநிற்பதால் ஆனை மலை முதலான இடங்களிலிருந்து வந்துள்ளவர்களும், பல துன்பங்களைப் பிறர்க்கு விளைவிக்கின்றவர்களுமாகிய இழிந்த இச்சமணர்கட்கு யான் எளியேன் அல்லேன்.

- திருவாசக மனனப்போட்டி.

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**அன்பினில் விளைந்தஆ ரமுதே**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் றனக்குச்**
**செம்மையே ஆய சிவபதம் அளித்த**
**செல்வமே சிவபெரு மானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

.

பொழிப்புரை:

தாயே! தந்தையே! நிகரில்லாத மாணிக்கமே! அன்பாகிய கடலில் உண்டாகிய அருமையான அமுதமே! பொய்ம்மையான செயல்களையே அதிகமாகச் செய்து காலத்தை வீணாகக் கழிக்கின்ற புழுவையுடைய இடமாகிய உடம்பில் உள்ள கீழ்மையேனுக்கு, மிக மேன்மையான சிவபதத்தைக் கொடுத்தருளின அருட்செல்வமே! சிவபிரானே! இவ்வுலகிலேயே உன்னை உறுதி யாகப் பற்றினேன், நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது?.

**மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை**
**யார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி**
**வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய**
**போற்றியென்னும்**
**கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்**
**கண்டுகொள்ளே.**

பொழிப்புரை:

எல்லாவற்றையும் உடையவனே! உனது, மணம் நிறைந்த திருவடியைப் பெறுதற்கு என் உடல் புளகித்து, நடுநடுங்கி கைகளைத் தலைமேல் வைத்து, கண்களில் நீர் வடிந்து, மனம் புழுங்கி, பொய்நீங்கி, உன்னைக் குறித்து வணங்கித் துதிக்கின்ற ஒழுக்கத்தை நான் தளர விட மாட்டேன். ஆதலால் எனது நிலைமையை, நீ நோக்கி உன் அடியாருள் ஒருவனாக ஏற்றுக் கொள்வாயாக!

- **திருமந்திர மனனப்போட்டி.**

**தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே.**

பொழிப்புரை:

குருவருளால் பெறப்படும் உண்மை ஞானத்தைப் பெறாதவர் சிவனது இயல்பை உணரமாட்டார், அதனால், அவர் ஆன்மலாபத்தை அடைதற்குரிய ஆன்மாவும் ஆகார். (ஹசடத்தோ டொப்பர்ஹ என்பதாம்.) ஆதலின், அவர் சிவமாம் நிலையைப் பெறுதலும், அப்பேற்றால் பிறவி யற்றவராதலும் இல்லை.

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே.**

பொழிப்புரை:

(பதி ஒன்றேயன்றோ என்றும் உள்ளது? ஏனைய பசு, பாசம் இரண்டும் எவ்வாறு தோன்றின? என்று ஐயுறும் மாணாக்கரைக் குறித்து,) “பதி, பசு, பாசம்” என்று சொல்லப்படுகின்ற மூன்று பொருள்களில் பதி தோற்றம் இன்றி என்றும் உள்ள பொருளாதல் போலவே, ஏனைப் பசுவும், பாசமும் தோற்றம் இன்றி என்றும் உள்ள பொருள்களாம். (இவ்வுண்மை அறியாதார் பலவாறு கூறி மலைவர் என்பது கருத்து) பாசங்கள் பசுவைப் பற்றுமேயன்றிப் பதியினிடத்து அணுகமாட்டா. பசு, பதியினிடத்து அணுகும் அவ்வாறு அணுகும் பொழுது அதனைப் பற்றியுள்ள பாசங்கள் அதனைப் பற்றிநில்லாது விட்டு நீங்கும். (என்று அருளிச்செய்தார்)

- **திருக்குறள்** **இரண்டாம் அதிகாரம்**

- **பேச்சுப்போட்டி** **“திருக்கேதீச்சரம்”** சுயதேடல்.

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.**